# கி.ரா. எனும் அடையா நெடுங்கதவு

- கிருஷி

சத்தமில்லாமல் ஒரு மௌனப் புரட்சியை நிகழ்த்தி விட்டு, கி.ரா. என்று எல்லோராலும் உரிமையோடும் பிரியத்தோடும் அழைக்கப்பட்ட கி. ராஜநாராயணன் நம் எல்லோரிடமிருந்தும் துன்பங்கள் மண்டிக் கிடக்கும் இந்த ஸ்தூல உலகிலிருந்து மனநிறைவோடு விடைபெற்றுக்கொண்டார், மிச்சமிருந்த மிச்சக் கதைகளையும் எழுதி முடித்து விட்டு.

சுதந்திரம் பெற்று இந்த 74 ஆண்டுகளில் (ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு காலத்தில்) நடைபெறாத ஒரு மகத்தான மாற்றத்தை, ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிவிட்டு விடைபெற்றிருக்கிறார். கி.ரா. மறைந்த பின் எழுதிய அத்யாயம் இது.

தமிழ் இலக்கிய உலகில் 150 ஆண்டு கால வரலாற்றில் எத்தனை எத்தனை உன்னதப் படைப்பாளிகள் தோன்றி தமிழ் மனங்களில் ஆளுமையும் சிந்தையில் மாற்றமும் செலுத்தியிருக்கிறார்கள்.

எந்த ஓர் எழுத்தாளருக்கும் அரசு மரியாதையுடன் துப்பாக்கிக் குண்டுகள் முழுங்க இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றதில்லை தமிழ் நாட்டில். தமிழக அரசியல் - சமூக - கலாசார வெளியில் - வழியில் இது ஓர் திருப்புமுனை. மறைந்த பின் கி.ரா. நிகழ்த்திய மௌனப் புரட்சி.

புதுச்சேரியில் பிரபஞ்சன் மறைந்த போது நண்பர் பி.என்.எஸ். எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியினால் பிரபஞ்சன் இறுதி அஞ்சலி அரசு மரியாதையுடன் நடந்தது - புதுச்சேரியில். ஆனால், எந்த அமைப்புகளும் முன்முயற்சி எடுப்பதற்கு முன்பாகவே அரசின் அறிவிப்பு வெளியாகிறது.

அதற்கு கி.ரா. மூத்த - முதுபெரும் - தனித்துவம் மிக்க எழுத்தாளர் என்பது மட்டுமே காரணமல்ல பின்னே...!

இடைசெவலில் தான் பிறந்த மண்ணிலே - அதுவும் சின்னஞ்சிறிய கிராமத்திலே ஒரு அரசாங்கமே தமிழகத்தின் தலைநகரிலிருந்து பல நூறுமைல்கள் பயணம் செய்து ராணி மங்கம்மான் நெடுஞ்சாலையிலிருந்து குறைந்தது இரண்டு மைல் விலகி - கிராமத்துச் சாலையில் மெல்ல சக்கரங்கள் உருள நகர்ந்து. அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடைபெற்றது என்றால். அதன் பின்னணி தான் என்ன!

தாய்க்குத் தாயாய் அம்மா கணவதி அம்மாவைப் போல் தாதிக்குத் தாதியாய் பத்தாண்டு காலமாக இரண்டாவது மகன் பிரபி என்று பிரியமாக அழைக்கப்பட்ட பிரபாகரனிடம் ‘என்ன நடந்தது பிரபி’ என்று நல்லடக்கம் செய்யப்பட்ட அன்றிரவு கேட்டேன். ஃபோனை எடுக்கும் மனநிலை எங்கே இருக்கப் போகிறது பிரபிக்கு என்ற தயக்கத்தில் தான் முயற்சித்தேன்.

அவராகவே ஃபோனில் கூப்பிட்டார் பிரபி. ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் பேசினார். முந்தின நாள் 17 மே 2021-ல் இரவு சரியாக 10.55 - 11.00க்கு சரியாக அஞ்சு நிமிசம் மகன் பிரபியைத் தன் இரு கரங்களாலும் ஆரத்தழுவும் நிலையில் கி.ரா. வார்த்தையில் சொன்னால் சீவன் பிரிகிறது.

கி.ரா. பக்கத்திலேயே அமர்ந்திருக்கிறார் பிரபி.

‘எப்படா பிரியும் என் சீவன்’
‘சும்மா இருங்கப்பா போகாம..’
‘அந்தாலே எட்டிக்கிட்டு மிதிக்கன்னா...’
என்று அழுத்தம் கொடுக்கிறார் கி.ரா.
மெல்லக் சிரிக்கிறார் பிரபி
‘சிரிப்பு...’ என்ற நக்கல் தொனியில் பிரிகிறது கி.ரா. சீவன்.
மறுநாள் காலையில் பத்திரிகையாளர் கூட்டம்.

‘புதுச்சேரியில் இவ்வளவு ஆண்டுகாலம் இருந்துவிட்டீர்கள். கி.ரா.வின் இறுதி அஞ்சலி இங்கு தானே’. சற்றும் யோசிக்காமல் - எந்த வித யோசனைக்கும் இடம் கொடாமல்.

‘அண்ணனும் நானும் கலந்து பேசிட்டோம் இடைசெவலில் தான் எல்லாம்’ என்கிறார் மின்னல் பொழுதில் பிரபி.

அந்த நேரம் தான் புதுச்சேரி கவர்னர் தமிழிசை சௌந்தர்ராஜன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த வந்த நேரம். ‘புதுச்சேரி அரசின் சார்பாக கி.ரா. இறுதி நிகழ்ச்சிகளை அரசு மரியாதையுடன் நடத்தலாம்’ என்று இருந்தோம். கி.ரா.வின் மகன் தமிழ் நாட்டில் கி.ரா.வின் இடைசெவலிலேயே நடத்தவிருக்கிறோம் என்று சொல்லி விட்டார். எனவே இப்பொழுதே இங்கேயே புதுச்சேரி அரசின் சார்பாக எமது இறுதி அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம். மாண்புமிகு ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு - அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலியை நிகழ்த்தும் என்பதில் எந்த விதச் சந்தேகமுமில்லை. என்கிறார். புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் ஊடகங்களின் முன்னே.

பிரபியும் பத்திரிகையாளர்கள் முன்னே ‘கி.ரா.வின் இறுதி அஞ்சலி நிகழ்வை அரசு மரியாதையுடன் நிகழ்த்திட வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் ஐயா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்’ என்கிறார்.

செய்திகள் ஃப்ளாஷ் ஆகிறது ஊடகங்கள் வழியே உலகெலாம். மின்னற் பொழுதில் அடைய வேண்டிய கண்களையும் காதுகளையும் சென்றடைகின்றன.


கொஞ்ச நேரத்திலேயே தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளிவருகிறது.

கேட்டும் பெற முடியாத வேண்டுகோள் நிறைவேறுகிறது. கேட்காமலே கேட்காத வேண்டுகோள்களும் உத்திரவாதமாக அறிவிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

- கி.ரா. பிறந்த மண்ணாகிய இடைசெவலில் அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடைபெறும்.






- கி.ரா. பயின்ற பள்ளி பழைமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.
- கோவில்பட்டியில் கி.ரா.வுக்குச் சிலை நிறுவப்படும்.

தானாக முன்வந்து ரொம்ப இயல்பாக நடந்த இந்நிகழ்வுகள் - தமிழ் நெஞ்சங்களில் அமிழ்தத்தை வார்த்தன.

பாண்டிச்சேரி - விழுப்புரம் வழியே வழிநெடுக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தவரும், இடது சிந்தையர்களும் 'வீர வணக்கம் வீர வணக்கம்' என்று முழக்கமிட்டு மாலையிட்டு மலர்தூவி தமது இதயத்து அஞ்சலி செலுத்தி மனம் ஆறினார்.

இடைசெவலில் அரசு மரியாதையுடன் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க கி.ரா.வுக்கு அரசு இறுதி அஞ்சலி செலுத்தி - தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் - தமிழ் பண்பாட்டுக்கும் - தனக்கும் பெருமையும், கௌரவமும் சேர்த்துக்கொண்டது முதல்வர் ஸ்டாலின்தலைமையிலான தமிழக அரசு.

தமிழக அரசை வாழ்த்துகிறோம் நன்றியுடன்!

சரி..., இந்தத் தேதியில் கி.ரா.வின் மறைவுச் செய்தி நிகழாமல்... ஒரு பத்துப் பதினைந்து நாட்களக்கு முன் நிகழ்ந்திருந்தால்...? அதி மில்லியன் டாலர் கேள்வி அல்ல...!

விவேகானந்தர் தன் இறுதிக்கணத்தைத் தீர்மானித்தது போன்று கீ.ரா. என்ற இலக்கிய ரிஷியும் தனது நேரத்தை தீர்மானித்த இந்த மாயத்தை நிகழ்த்தியிருப்பாரோ...! சமூக, அரசியல், கலாச்சார தமிழ் வாழ்வில் - புதிய அத்யாயத்தை தன் மறைவின் மூலம் - தன் மறைவின் பின் நிகழ்த்த வேண்டும் என்பது அவர் ஆழ் மனத்தின் உள்ளொளியோ...! எப்படியோ இந்த விஷயத்திலும் கி.ரா.வே முன்னத்தி ஏர்! சொல்லேர் உழவர் அல்லவா!

கரிசல் வட்டாரச் சொல்லகராதி - மாரீஸ் போன்ற அற்புத ஓவியர்களின் (Layout Artist) துணையோடு உருவாக்கியதாகட்டும். கழனியூரன், பாரத தேவி போன்றோரை ஊக்கப்படுத்தி நாட்டுப்புறக் கதைகளைச்சேகரித்ததாகட்டும். ஒவ்வொரு பதிப்பிலும். அவர்கள் பெயரை தன் பெயரோடு சமமாக இணைத்து அச்சிட்டதாகட்டும்.

எந்த எழுத்தாளனும் எழுதத் துணியாத பாலியல் கதைகள் -மறைவாகச் சொன்ன கதைகள் ஆகட்டும் - நிறைய எதிர்ப்புகளை மீறி எழுதியதாகட்டும். ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றெல்லாம் நடந்திருக்கிறது. கபூனியூரன் பிரபல்யமானதும், அவர் தோப்பில் மீரான் வீட்டில் தலைமறைவு கொள்ள நேர்ந்த அதிசயங்களையும் நிகழ்த்தக் காரணமாக இருந்தது கி.ரா.வின் கைவண்ணத்தான்.

விவசாய சங்கப் போராட்டத்தில் சிறைக்குச் சென்றதகாட்டும். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் கு. அழகர்சாமியும் கி.ரா.வும் இணைந்து அவர்கள் தலைமையில் செங்கொடி ஏற்றி - இடைசெவல் தொடங்கி கிராமங்களின் ஒற்றையடிப் பாதைகளின் வழியே மே தின ஊர்வலம் நடத்தியது ஆகட்டும்..

எல்லாவற்றிலும் எழுத்தாளர்களின் முன்னோடி...

எழுத்தாளர்களும், கலைஞர்களும், ஓவியர்களும், தகைமை வாய்ந்த ஆர். நல்ல கண்ணு, வை. கோபால்சாமி, கே.எஸ். ராதாகிருஷ்ணன் போன்றோரும் இளையராஜா, நடிகர் சிவகுமார், ஆதி மூலம், ட்ராட்ஸ்கி மருது போன்றோர் எல்லோரும் பரஸ்பரக் காதலோடு வருவதும் போவதுமாக இருந்தது கி.ராவின் ராஜபவனம். அவர் வீட்டுக் கதவு அடையா நெடுங்கதவாக இருந்தது.

அவரின் - இனிய இல்லத்தரசி கணவதி அம்மாள் கையால் ரெண்டுவாய்ச் சாப்பிட்டவர்களும் வாய் திகட்டச் சொன்ன கி.ரா.வின் கதைகளோடும், கை மணக்கக் கொடுத்த கி.ரா.வின் இல்லத்தரசி கணவதி அம்மாளின் விருந்தின் வாசத்தோடும் - கி.ரா.வின் 'கதவு' வழியே வந்தவர்கள் எழுத்தாளர்கள் ஆனார்கள். சாஹித்ய அகடாமி விருது வாங்கினார்கள். திரைப்படம் எடுத்தார்கள். கோவில்பட்டி எங்கும் எழுத்தாளர்கள் நிரம்பி இருக்க - தமிழகம் எங்கும் பரவியிருக்கிறார்கள்.

அடையா நெடுங்கதவு கி.ரா.வின் இறுதி அஞ்சலி நிகழ்விற்கு - முதல் முறையாக கி.ரா.வின் இடைசெவல் கிராமத்திற்கு தலைநகரமே நேரில் வந்தது.

கி.ரா.வின் சொந்த நிலத்தில் தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன். சபாநாயகர் அப்பாவு, எம்.பிக்கள் கனிமொழி, மார்க்சிஸ்ட் சு. வெங்கடேசன் சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், சதன் திருமலைக்குமார், ரகுராமன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் செந்தில் ராஜ், எஸ்.பி. ஜெயகுமார், ம.தி.மு.க. வைகோவின் மகன் துரை வைகோ. ஆகியோர் அஞ்சலி செலுத்தி... 21 குண்டுகள் முழங்க வழி அனுப்புதல் நடைபெற்றது.

தமிழக வரலாற்றின் கரடு முரடான நிலத்தில் பொன் ஏர் பூட்டி முதல் உழவைத் தொடங்கி இருக்கிறார் மறைந்த பின் கி.ரா. எனும் சொல்லோ உழவர்.



kirushi@thaiveedu.com

# கிராவுடன்..

**- ட்ராட்ஸ்கி மருது**

**கி.** ரா.வின் கதைகளைப் படித்திருந்தாலும், 80களின் கடைசியில் மூத்த ஓவியர் ஆதிமூலமும் நானும் மத்திய அரசின் நெசவாளர் பணி மையத்தில் ஓவியர்களாக இருந்தோம். எங்கள் அலுவலகமும் அண்ணா சாலைக்கு இடம் பெயர்ந்த நேரம். அலுவலகக் கட்டடத்தின் இரண்டாவது மாடி தான் ஓவியர்களுக்கான தளம். இங்கு நாங்கள் இருவரும் பொது வெளியிலும் இயங்குகிறபடியால் ஓவியர்கள், இளம் கலைஞர்கள், எழுத்தாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், பத்திரிகைச் செயற்பாட்டாளர்கள், அப்போது சென்னை வந்து சேர்ந்த இலங்கைத் தமிழ், அரசியல் செயல்பாட்டாளர்கள் என்று எப்போது நண்பர்கள் வந்து போகிற இடமாக இருந்தது எங்கள் அலுவலகம். வெகுமக்கள் பத்திரிகைகளில் ஆதியும், நானும் இயங்கிய ஆரம்பம். மெதுவாக... குங்குமம் என ஆரம்பித்து இ.ரா. வேலுச்சாமியால் ஆனந்த விகடனுக்கும் ஓவியம் அளிக்க ஆரம்பித்த நேரம் அப்படித்தான். கி.ரா.வின் தொடருக்கு ஆதி சித்திரங்களைத் தீட்டினார். அடுத்து ஜுனியர் விகடனில் வந்த அவரது தொடருக்கு நான் வரைந்தேன். பின் தொடர்ந்து தாய் இதழில் 'வயது வந்தவர்க்கு மட்டும்' என்ற அவரது தொடருக்கும் வரைந்தேன். கி.ரா.விற்கு ஆரம்பத்தில் ஆதி வீட்டில் வரைந்து அலுவலகம் கொண்டு வருவார். என்னிடம் முதலில் காண்பிப்பர். அதுவும் பெரிய பேப்பரில் வரைந்து கொண்டு வருவார். ஆனந்த விகடன் காரர்கள் திண்டாடுவார்கள்.


கி.ரா.வின் எழுத்து வெகு மக்களிடம் செல்ல அப்போதைய எங்களின் நவீன பாணி ஓவியங்களின் வீச்சும் ஒரு காரணம் என்று அவரே அடிக்கடி சொல்வார், பெரும் அடக்கத்துடன். நான் அவரை வியந்து பார்ப்பேன் அப்போதும். அவர் வயது குறித்தும். அவரது அற்புதமான இயல்புமிக்க உரையாடலும் ஒரு கவர்ச்சி தான். அவ்வப்போது அவர் சென்னை வரும் போது எங்களது மாடிக்கும் வராமல் இருக்காது அவரது சென்னை விஜயம். தொடர்ந்து அவரது பல நூல்களுக்கு ஆதியும் நானும் பங்களித்தோம். ஆதி மறைவின் போதும் உடல் நலமில்லாத நிலையிலும் சென்னை வந்தார்.

ஆதிக்குப் பிறகும் நான் தொடர்ந்தேன். பாண்டிச்சேரிக்கு தொடர்ந்து செல்ல முடியவில்லை என்றாலும் ஏதாவது எனது ஒரு சித்திரம் அவரை பாதித்தால் உடனே தொலைபேசியில் அழைத்துப் பாராட்டி விடுவார்.

ஆதியும் நானும் அவரது சொற் பிரயோகத்தை வியந்து பேசிய படி இருப்போம். எனது சகோதரர் திலக்கின் நண்பன் கு. அழகிரி சாமியின் மகன் சாரங்கன். அவரோடு அவருடைய விளம்பரப் படங்களுக்கு - 80க்கும் மேலான படங்கள் கலை இயக்குநராக இயங்கிய காலத்திலும் அழிகரிசாமிக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு பற்றிய சம்பவங்கள் பல சொல்லிக் கேட்டிருப்பான் சாரங்கன்.

நான் வரைந்த கு. அழகிரிசாமி ஓவியமும் அவருக்குப்பிடித்த ஒன்று. அந்தத் தொகுப்பை சென்னையில் அவரே வெளியிட்டார்.

தாய் வார இதழில் வந்த 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற தொடருக்கு விரசம் வந்துவிடாதபடி எனது சித்திரங்கள் பற்றியும் பலர் பாராட்டினாலும், பொது வெளியில் குடும்பத்தினர் அனைவரும் படிக்கும் இதழில் சித்திரமாகத் தீட்டும் போது நகைச்சுவை தான் வெளிப்பட வேண்டுமே தவிர விரசம் தோன்றிவிடக்கூடாது என்றும், படித்தவர் படம் பார்த்து நகைக்க வேண்டும் என்கிறபடி வரைந்தது சவாலான ஒன்று தான் என்றும் கி.ரா. பாராட்டினாலும், எனது தந்தை அச்சித்திரங்களைப் பற்றி ஒரு கருத்தைக் கூறியது இன்றும் மறக்க வில்லை. அவர் "அப்படியான கதை எழுதலாம் படிப்பவர் மனதில் சித்திரம் இன்னும் நின்றுவிடும். நீ அதற்கு வரைய வேண்டுமா என்று நினைத்தேம்பா" என்று கூறியதும், பிறகு "நீ பொறுப்போடு தான் செய்திருக்கிறாய்" என்று பாராட்டியதும் நினைவிலேயே இருக்கிறது. என்னவெனில், எனது மூன்று நான்கு வயதிலிருந்து நான் வரைகின்ற சித்திரங்களின் முடிவு அவரிடம் காட்டிப் பாராட்டுப் பெறுவதும் எனது வாழ்வில் ஒரு



K. K. Rajah

தொடர் நிகழ்ச்சியாக இருந்தது. எனது தந்தை மரணிக்கிற வரையில் எனது அனைத்து சித்திரங்களையும் ரசித்துப் பாராட்டி மகிழ்வார்.

கி.ரா. எனது தந்தையின் இடத்தில் நின்றவர்களில் முக்கியமானவர். அவ்விடத்தை நிறப்பியவர். கடைசிக் காலங்களில் அவரோடு சந்திப்புகள் அருகிவிட்டது என்றாலும், தோற்றப் பொலிவுடன் அவர் ஆதி மற்றும் எனக்கு முன் அமர்ந்திருக்கிறச் சித்திரம் இப்போதும் நின்றுகொண்டிருக்கிறது.

பின்நாளில் அவரது 'ஒருத்தி' திரைப்படத்திற்கும் நான் கலை இயக்குநராக வேலையை ஆரம்பித்துவிட்டோன். ஐரோப்பியப் பயணம் முக்கியமாகிவிட்டதால் பயணிக்கவேண்டி, அந்த வாய்ப்பு நிறைவேறாமல் போய்டவிட்டது.

கி.ரா.வின் எழுத்து, கிராமமும் கதாபாத்திரங்களும் தமிழ் மனங்களில் என்றும் வாழும்.



trotskymarudu@thaiveedu.com




# கி.இராஜநாராயணனின் கோபல்ல கிராமமும் இனக்குழு வாழ்க்கையும்

**- சு.வேணுகோபால்**

தமிழகத்தில் ஒரு புதிய கிராமம் உண்டான கதையை சொல்கிறது இந்நாவல். பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்திய அரசியல் சூழலில் விளைந்த விளைச்சல் இது. புதிய கிராமம் என்றால் எல்லா அம்சங்களிலும் புதிது. மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், உருவம், நம்பிக்கைகள், பயம், ஏக்கம், கவர்ச்சி என தமிழ்மண்ணிற்கு புதியனவோடு வந்த நாயக்கர்களை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவல்.

இந்நாவலில் இடையறாது ஓடும் காலம்தான் கதாநாயகன். முன்னூறு ஆண்டு கால காலமாற்றங்கள் அப்படியே உருண்டு புரண்டுவரவில்லை. ஆந்திராவிலிருந்து முஸ்லீம்களால் துரத்தப்பட்ட நாயக்கர் என்ற தேசிய இனம் தமிழ்நாட்டுக்குள் அடைக்கலமடைந்து - வளர்ந்து - சிதைந்து போன மிக மெல்லிதான ஒன்றை இழை இடையறாது சொல்லப்படுகிறது. அந்த இனத்திற்குள் பன்முகப்பட்ட மனிதர்கள் இனங்காட்டப்படுகிறார்கள். அவர்களை வாசிக்க வாசிக்க சுகமாக இருக்கிறது. அந்த மனிதர்களின் முழு ஆளுமையை நோக்கிய பயணமாக இல்லை. அம்மனிதர்களிடம் ஏதோ ஒரு கணத்தில் வெளிப்பட்ட தூக்கலான அம்சங்களைத் தொகுத்துச் சொல்கிறார். அந்த அம்சம் கி.ராவிற்கே உரிய கவர்ச்சியான தொனியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சிறு அம்சத்திற்குள் உடலசைவுகளின் சகல நுட்பங்களை வெளிப்படுத்தியபடியும், மனசஞ்சாரத்தை அளவோடும் சொல்லும் வித்தை செவ்வியல் தன்மையை எட்டிப்பிடிக்கிறது.

‘கைகளால் கோரி அந்தக் குளுமையான தண்ணீரில் முகத்தை வைத்து அளைந்தாள். ஒரு குழந்தையை வாரி எடுத்து அதன் மெல்லிய வயிற்றில் வைத்து முகத்தைப் புதைத்து சுகம் காணும் ஒரு தாயின் செய்கையைப் போலிருந்தது அவள் செய்தது’ கொலைப்படுவதற்கு முன் எழுதப்பட்ட வரிகள். எவ்வித பதட்டங்களையும் வாசகன் முன் விரிக்காமல் வெகு இயல்பாக கி.ரா.இப்படித்தான் கதையை நகட்டுகிறார். அடுத்தநொடி பற்றிய கவனத்தை துறந்துவிட்டு நிகழ்வின் நியதிப்படி எழுதிச்செல்லும் கலை கி.ராவிடம் அகப்பட்டதுபோல் மற்ற எழுத்தாளர்களிடம் முகிழ்க்கவில்லை. அதற்குக்காரணம் கற்பனையின் பரப்பிலிருந்து மாந்தர்களை உருவாக்காமல் கேள்விப்பட்ட, பார்த்த, வாழ்ந்து முடிந்த மனிதர்களை இலக்கிய பிரதிக்குள் இழுத்து வருவதுதான்.

இந்த அம்சத்தை புனைவு மாந்தருக்குள் கையாளப்படும் போது அதன் இலக்கியத்தன்மை மிகப்பிரமாண்டமாக மாற வாய்ப்பிருக்கிறது. புனைவு மாந்தனைத் தன் இஷ்டப்படி வளைத்து நிமிர்த்தி இழுத்து விசிறிவிட்டு விளையாடலாம். உண்மையில் வாழ்ந்த மனிதர்களைப் பதிவு செய்யும் போது யதார்க்கப் படைப்பாளிகள் அப்படிச் செய்வதை பழுது என்று நினைத்து ஒதுங்கிக் கொள்கின்றனர். சேதாரம் இல்லாமல் வார்த்தைகளில் உருவாக்கிவிட நினைக்கிறார்கள். அல்லது பார்த்த மனிதரைச் சிதைத்து உருவாக்க மனம் ஒப்புக்கொள்வதில்லை. அந்த மாந்தருக்குள் படைப்பாளி தன்னையும் புகுத்திக்கொள்வது என்பது நம் படைப்பாளிகளிடம் நிகழவில்லை. கி.ரா. அதில் கெட்டிக்காரர் போல தென்படும். அந்தக் கெட்டிக்காரர் தன்மை உள்ளம் சார்ந்ததல்ல. உடல் சார்ந்து மட்டுமே நின்றுவிடுகிறது.

கோபல்ல கிராமம் இழந்த காலங்களின் மேல் விழுந்த கவர்ச்சியை அப்படியே பெயர்த்து முன்வைக்கிறது. இது கி.ரா.வின் மனம் சார்ந்த செயல்பாட்டால் நிகழ்வது. துயரமான நிகழ்வும் மகிழ்ச்சியான நிகழ்வும் கவர்ச்சியாகச் சொல்லப்படுகின்றன. இதற்கு அவரிடம் வாய்த்திருக்கும் நடை மக்கள் மொழியில் உருவாக்கிக் கொண்டதுதான். மற்றவர்களும் பேச்சுமொழியைக் கையாண்டாலும் இவரிடம் உருவாகும் ரம்யம் வெளிப்படுவதில்லை. கி.ரா.விடம் நிகழ்வுக்கான வார்த்தைகளின் தேர்வு வெகு இயல்பாக இருக்கின்றன. மற்றவர்களின் எழுத்துக்களில் வட்டார மொழி இருக்கிறதே தவிர அது பொதித்து வைத்திருக்கும் தொனி காதுகளில் ஒலிப்பதில்லை.

இந்த கவர்ச்சியைத் தாண்டி வாழ்வின் விரிவான தளங்களை நோக்கி கி.ரா படைப்பு நகர்வதில்லை. தன்னைத்தானே இயங்கிக் கொண்டிருக்கும் படைப்பு நிலை இல்லாமல் ஒருவர் எப்போதும் நம் முன் சம்மணங்கால் போட்டுக்கொண்டு கதை சொல்லும்

பாங்கு இவரின் எழுத்தம்சமாக இருக்கிறது. இதனால் மன நெருக்கடிகளுக்கும் வரலாற்றின் நெருக்கடிகளுக்கும் உரிய காலம் படைப்பில் நழுவி விடுகிறது. மாறாக மனசும், காலமும் கதை சொல்லியின் போங்கால் தொட்டுக்கொண்டு போகின்றன. இந்த நிலையிலும்கூட கி.ரா.வின் எழுத்து காட்சி ரூபம் பெற்று வாசகருக்குள் ஓர் உலகத்தை விரிக்கத் தொடங்கிவிடுகிறது. அதற்கு அவரிடம் இருக்கும் சொல்தொனி, உடலசைவும்தான் காரணம். ஐம்பதுகளின் தொடக்கத்தில் மிக முக்கிய நாவலாக கருதப்பட்ட இன்றளவும் கருதப்படும் 'பொய்த்தேவு' நகர்வு ஒரு கதை சொல்லியின் பார்வையில்தான் சொல்லப்படுகிறது. கி.ரா.விடம் வெளிப்படும் காட்சிரூபம் பொய்த்தேவில் வெளிப்படவில்லை. வாழ்வின் மீதான விமர்சனம் பொய்த்தேவில் இருக்கிறது. கோபல்லகிராமத்தில் இல்லை. இரண்டிலும் இருவேறுபட்ட குறைகள் இருக்கின்றன. கி.ரா. எழுத்துக்கள் இந்த விமர்சன பார்வை வந்திருந்தால் தமிழில் எப்போதோ ஆகச்சிறந்த நாவல் எழுதப்பட்டிருக்கும். கி.ரா.வால் நிகழ்ந்திருக்க வேண்டிய ஒரு இலக்கிய நிகழ்வு நிகழாமலே போய்விட்டது. அவரிடம் மட்டுமே தமிழ் மண் மனம் மிக வலுவாக இருக்கிறது. அடுத்த இடத்தில்தான் தி. ஜானகிராமனை சொல்ல முடியும்.

இயல்பின் அம்சங்கள் நிறைவாக சொல்லப்பட்டிருக்கும் படைப்பு கோபல்ல கிராமம். கி.ரா. எந்த கதாமாந்தர்களின் பக்கமும் சாய்ந்தும் கொள்ளாமல் விலகியும் நிற்காமல் சொல்கிறார். அதனதன் குணஇயல்புக்கு உந்து கி.ரா. தன்னிடம் உள்ள பூசு பொடியை அம்மனிதர்கள் மீது தடவிவிடுகிறார். சொல்தொனிதான் அந்த பூசு பொடி.


அவ்வக்காலத்தின் மனிதர்கள் அசலாக வருகிறார்கள். அவர்களை வைத்து வரலாற்றின் ஓர் இழையை படைப்புக்குள் ஓடவிடுகிறார். சுல்த்தான்களில் தாக்குதலால் (ஆந்திர கர்நாடக தேசத்தில்) விஜயநகரப் பேரரசு சிதைகிறது. வேளாண்மக்களுக்கு முஸ்லிம்களால் நேர்ந்த அவமானங்கள் சொல்லப்படவில்லை. அவமானத்திற்குள்ளான மக்கள் தப்பித்துத் தமிழகம் வருகின்றனர். அவமானங்களை மூடி மறைத்து தங்களுக்கு ஒருவித தெய்வாம்சத்தைப் போர்த்திக்கொண்டு தமிழகம் வருகின்றனர். அந்த புராணிகம்தான் அவமானத்தைக் கிளறாமல் தாக்கும் கவசம் என மிகச்சரியாகத் தேர்கின்றனர். காலம் அப்படி. புதிய தேசத்தில் புகும்போது மரியாதையில்லாமல் போய்விடக்கூடாது என்ற அச்சத்தால் உருவாக்கப்பட்ட புனைவுதான் தெய்வாம்ச கற்பனைகள். அவர்கள் பட்ட அடிகளிலிருந்துதான் அது உருவாகியது. அந்த அனுபவ உலகத்திற்குள் கி.ரா. உட்புகாமல் நாயக்கர் உருவாக்கி வழங்கி வரும் கர்ண பரம்பரை கதையை எவ்வித விமர்சனமும் இல்லாமல் அப்படியே எடுத்துக்கொண்டு விட்டார். அந்த கதை கி.ரா.வின் கண்களில் கவர்ச்சிமிக்க மொழியால் சொல்லப்பட்டிருக்கிறது. புராணிகத்தை உடைத்து கி.ரா. உள்ளே புகுந்திருந்தால் மாபெரும் வரலாற்றுத்தன்மையை வரித்துக்கொண்ட நாவலாக மாறியிருக்கும்.

கோபல்ல கிராமத்தின் கதை முந்நூறு ஆண்டுகள் ஊடாடினாலும் கட்டபொம்மன் வாழ்ந்த காலம்தான் நாவலின் மையமான காலம். கொள்ளையடிப்பது ஒரு இனத்தாருக்கு குலத்தொழில். விவசாயம் பார்ப்பது இன்னொரு இனத்தாருக்குக் குலத்தொழில் இப்படி தச்சுத்தொழில், ஊர்க்காவல் என ஒவ்வொரு இனத்தாருக்குரிய குலத்தொழில் நொல்லைக் கண்கொண்டு பார்க்கப்படாமல் அவர்களின் வாழ்க்கையின் இயல்பான அம்சமாகப் பார்க்கப்படுகிறது. தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் கோபல்லகிராமத்தை முற்றுகையிடும்போது நாயக்கர்கள் அதை எதிர்கொள்ளும் முகத்தான் இருப்பது. கோவித்துக் கொண்டுவந்த நகையாசாரியின் மனைவிக்கு ஏற்படும் தண்ணீர்தாகம் திருடனுக்கு ஏற்படும் தண்டட்டிகள் மீதான திருட்டு மோகம் இரண்டு எதிர்நிலைகள் மோதிக்கொள்வது கழுவேற்றப்பட்ட திருடனை ஒரு குற்றவாளியாகவே சித்தரிக்காமல் திருட்டின் அனுபவங்கள் அவனுள் நிகழும் மாற்றங்களாகக் காட்டுவது. ஆந்திராவில் வைணவ விவசாய சமூகம் வியாபார தொழில்சார்ந்த முகமதிய சமூகத்தாரால் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பண்பாட்டு கலப்பிற்கு (மணமுறை) தாக்குப்பிடிக்க முடியாமல் தப்பிப்பது. தென்தமிழகத்தில் குடியேறிய நாயக்கர்கள் காட்டை செப்பனிட்டு விவசாயத்திற்குகந்த ஒரு கிராமத்தை உருவாக்குவது என காலத்தின் நிகழ்வுகள் இயல்பு குன்றாமல் சொல்லப்படுவதால் கோபல்லகிராமம் செவ்வியல் தன்மையை ஏற்றிருக்கிறது எனலாம்.

கிராமத்தின் குணாம்சம் கி.ரா. படைப்புகளில் உருவாகி இருப்பதுபோல் வேறு படைப்பாளிகளிடம் இல்லை.

- வாதியானவள் வழக்கைக் கேட்டுக்கொண்டு இருப்பவரையே தனது பிரதிவாதியாகப் பாவித்துக்கொண்டு 'பாவிப்பயிலே, உனக்கு நா என்ன செஞ்சேன்? எனக்கு நீ இப்பிடிச் செய்யலாமா?' என்று கேட்பாள். பார்ப்பவர்களுக்கு, வழக்குறைப்பவனுக்கும் கேட்பவனுக்கும்தான் தகறாரோ என்று நினைக்கத் தோன்றும்.
- 'என்னமா இருக்கு இந்தத் தண்ணி நாய்க்குட்டி வளக்கலாம் போலிருக்கே' என்றான் மனம் திறந்த ஆனந்தத்தோடு.
- 'ஐயா இப்பிடிக்கூடி ஒரு பொம்பிளை போனதைப் பாத்தியளா?'
- கோவிந்தப்ப நாயக்கர் பாக்குப் பெட்டிக்குள் கையைவிட்டார் கண்களை மூடிக்கொண்டு பாக்குகளை அள்ளினார் சரியாக ஐந்து பாக்குகள் வரவேண்டுமென்று நினைத்தார் அவரை மீறி அவருடைய கைக்குளிருக்கும் பாக்குகளை விரல்களை உணர்வினால் எண்ணிப் பார்த்தன. கை அது தப்பு பட்டென்று எடுக்கணும். பிறகு அதை எண்ணிப் பார்க்கலாம். இப்படி எடுத்தால் அது கூட்டா?' கையில் வந்த பாக்குகளைப் போட்ட விட்டு திரும்பவும் எடுக்க ஆரம்பித்தார்.
- இலை அவ்வளத்தையும் உதிர்த்துவிட்டு நெத்துகள் மட்டுமே கொண்டுள்ள வாகை மரத்தைப் பார்த்தால், 'இந்த வாகைக்கு லச்சை கிடையாது. எல்லாத்தையும் உதிர்த்துட்டு அம்மணமாய் நிற்கிறதைப் பார்' என்பார்.
- திரவத்தி எழுந்ததும் அவருடைய முதுகில், உடம்பில் பட்டிருக்கும் மண்ணையெல்லாம் சின்னத்தம்பி தனது கைகளால் துடைத்து விட்டான். அப்போதுதான் திரவத்தி நாயக்கர் அப்படிச் சொன்னார். அடேய் சின்னத்தம்பி சரியான மனுசுடா உனக்கு. நல்ல மனசுக்காரன்டா நீ.
- காயடி கொண்டய்யாவைப் பார்த்து, 'உன்னோடு யாரும் மல்லுக்கு வரமாட்டார்கள் உன்னைப் பார்த்தாலே பயமாக இருக்கு' என்பார் அக்கையா!
- இந்தச் சூரியோதயம் ஒன்றை எத்தனை தரம் பார்த்தாலும் சலிப்பதில்லை. அது ஒரு நித்தப்புதுமை அன்றலர்ந்த மலர் போல. இந்த கண்கசாத சூரியனை, பூப்படையாத மங்கையைப் பார்ப்பது போல கூசாமல் பார்க்கலாம்.

இப்படி பக்கத்துக்குப் பக்கம் மண்ணின் குணம் தன் போக்கில் பெருகிக்கொண்டே இருக்கிறது. தமிழ் இலக்கியத்திற்கு கி.ரா. தந்த மிகப்பெரிய கொடை இதுதான். வெனயமான மாந்தன் ஒருவன் இந்நாவலில் வருகிறான். அவன் அக்கய்யா. அவனுடைய சூட்சுமமான வெளிப்பாடுகள் தமிழ்ப்பண்பாட்டை அடையாளப்படுத்துகின்றன. அவனுடைய வாழ்க்கைப் பயணத்திற்குள் நாவல் சென்றிருந்தால் நம் வாழ்க்கை முறையில் பல போலிப் பெருமைகளை எள்ளி நகையாடியிருப்பான். இவ்வகையில் அக்கய்யா பாத்திரம் சாத்தியத்திற்கான வழி. கி.ரா.வின் நோக்கம் கோபல்ல கிராமம் தமிழ்நாட்டில் எப்படி உருவானது? எப்படி உருமாறியது? அங்கு மனிதர்கள் என்னவிதமாய் வாழ்ந்தார்கள்! என்பதுதான். அதனால் அக்கய்யா எல்லா மனிதர்கள் போல அவனும் ஒருவன் - அவர்களுள் ஒருவன் என்பதாக அமைத்திருக்கிறார். இந்த நோக்கில் கி.ரா. போனஸ் செய்திருக்கிறார் எனலாம். குரூரமான நிகழ்வுகளும் இவருடைய ஆளுமையில் சந்தோசமிக்கத் தருணங்களாக வாசகர் முன் மாறிவிடுகின்றன. திருடனை கழுவேற்றும் இடத்திலும் தண்டட்டிக்காக கர்ப்பிணியை நீரில் முக்கி கொலை செய்யும் இடத்திலும் பதைபதைப்பு மறைந்து விநோதமான வாழ்க்கை நடைமுறையாகக் காட்டுகிறார். தேர்வு சார்ந்த நிகழ்ச்சித் தொகுப்புகளால் ஒரு வசீகரத்தை படைப்பில் ஏற்படுத்துவதில் கி.ரா. கொள்ள ஆசைப்படுகிறார். எப்படியிருந்தாலும் கிராமத்தின் அசலான மனிதர்களைப் படைப்பில் உருவாக்கிக்காட்டும் வித்தை கி.ரா.விடம் பலமாக இருக்கிறது.



venugopal@thaiveedu.com

# ‘ஒரு தனி வீடு’ நாவலுக்கு கி.ரா. எழுதிய முகவுரை

(கி.ரா. (1922-2021) என்று அன்புடன் அழைக்கப்பட்ட, எங்களுடன் வாழ்ந்த கி. ராஜநாராயணன் கரிசல்காடு தந்த முதுபெரும் தமிழ் எழுத்தாளர். கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் என்ற முக்கியமான நாவல்களைத் தந்தவர். நாட்டுப்புறக் கதை களஞ்சியம் என்ற கதைகளை 944 பக்க நூலாக எமக்கு அளித்தவர். கிராமத்தில் புழங்கும் பாலியல் கதைகளை துணிந்து தன் ஆக்கங்களில் படைத்தவர். வட்டார வழக்கில் தன் கதைகளைச் சொல்லியவர். 1991ல் சாகித்திய விருது பெற்றவர். இந்திய கம்யுனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருந்தவர். 1947-1951ல் விவசாயிகள் கலகத்தை ஆதரித்ததற்காகவும் அதில் பங்குபற்றியதற்காகவும் இரண்டு முறை சிறை சென்றவர். அவருடைய ‘கிடை’ சிறுகதை ‘ஒருத்தி’ என்ற பெயரில் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது.

கி. ராஜநாராயணன் அவர்கள் தனது 99வது வயதில் எம்மைவிட்டுப் பிரிந்தார்.

மு. தளையசிங்கத்தின் ‘ஒரு தனி வீடு’ நாவலை தமிழ் நாட்டில் பிரசுரிக்க கி.ரா. எடுத்த முயற்சிகளும், அதற்கு அவர் எழுதிய முகவுரையும் நவீன இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுபவை. அதனால் அவர் எழுதிய அந்த முகவுரை இங்கே பிரசுரமாகிறது.)

ஒப்புக் கொண்டதனால் செய்கிற காரியந்தானே தவிர தளையசிங்கத்தின் புத்தகத்துக்கு முகவுரை எழு தும் தகுதி எனக்குக்கிடையாது. அவருடைய ‘போர்ப் பறை’யைப் படிக்க ஆரம்பித்ததுமே சிறந்த ஒரு சுயம்பான சிந்தனையாளர் அவர் என்பது தெரிந்துவிடும்.

திரு. ஆர். பத்மநாபனும், யேசுராசாவும் இங்கே வந்திருந்தபோது ஈழத்தின் இலக்கியப் படைப்பாளிகளில் யார் யாரை எல்லாம் படித்திருப்பதாக என்னிடம் கேட்டபோது, ‘அங்குள்ள ஒர்த்தரையுமே நாம் படிச்சதில்லை. நானிருக்கிறது ஒரு குக்கிராமம். புத்தகங்களுக்கு எங்கே போறது. அதோட இங்கிருக்கிறவர்களையே நா சரியாகப் படிக்கலையெ. ‘சரஸ்வதி’ பத்திரிகை வந்திட்டிருந்தப்பொதான் அங்கேயும் பலர் இருக்கிறதை கண்டுகொள்ள முடிஞ்சது’ என்றேன்.

ஈழத்துக் கலை இலக்கியக்காரர்களைப் பற்றிய பேச்சு விரிந்தபோது மு. தளையசிங்கத்தைப் பற்றிய கேள்வி வந்தது. யார் கையிலேயோ ‘போர்ப்பறை’ இருந்ததை வாங்கி அவசரவெட்டில் ஒரு பார்வை பார்த்தது. கொஞ்சம் கண் நுழைஞ்சதுமே அடே என்று மனசில் தைக்கும்படி இருந்தன என்றேன்.

அவர்கள் இலங்கை திரும்பியதும் திரு. பத்மநாபன் எங்களுக்காகவும், எனக்காகவும் பல புத்தகங்களை தபாலில் அனுப்பி வைத்தார். அவைகளில் ‘போர்ப்பறை’, ‘புதுயுகம் பிறக்கிறது,’ ‘மெய்யுள்’ இவை மூன்றும் இருந்தது.

மூன்றையும் படித்து முடித்தபோது, தளையசிங்கத்தின் வெளி-வராத கையெழுத்துப் பிரதியாகவே இருக்கும் நான்கு நாவல்களையும் புத்தகமாகக் கொண்டுவந்துவிடவேணுமே என்கிற பரபரப்பு மனசில தோன்றிவிட்டது. முதலில் ‘ஒரு தனி வீடு’ கொண்டு வருவோம் என்று நினைத்து உடனே அதை நகல் எடுத்து அனுப்பும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

1983-ல் நடந்த ஜுலை கலவரத்தின்போது அகதிகளாக யாரோ பேர் தெரியாத அகதி ஒருவர் மூலம் ‘ஒரு தனி வீடு’ தட்டச்சுப்பிரதி என் கைக்கு வந்து சேர்ந்தது. படித்து பார்த்துவிட்டு நண்பர் மீராவுக்கு அனுப்பி வைத்தேன் புத்தகமாக ஆக்க. அவருக்கு தளையசிங்கத்தின் எழுத்துகளைப் புத்தகங்களாகக் கொண்டு வரும் பாக்கியம் இல்லை போலும். அது என்னிடமே திரும்பி வந்துவிட்டது. குங்கிப் போனேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. யாருமற்ற ஒரு தீவில் அனாதையாக மாட்டிக் கொண்ட ஒரு நிலைபோல் தோன்றியது.

தமிழக்கத்தின் பிரபல வாரப் பத்திரிகைகளில் தொடராகக் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளுமாறு நண்பர் வண்ணநிலவனைக் கேட்டுக்கொண்டேன். அவர் அதைக் கையில் எடுத்துக் கொண்டு - தளையசிங்கத்துக்காக அல்ல! - எனக்காகப் படிகள் ஏறி ஏறி இறங்கினார். எந்த இடத்திலும் கதை பெயரவில்லை.

குற்றாலத்தில் ரசிகமணி டி.கே.சி. நினைவு விழாவுக்கு வந்திருந்த அன்பர் ரி.டி. திருமலையும் அவரது சகாவும் என் கையிலிருந்த ‘போர்ப்பறை’ புத்தகத்தை வாங்கி ஒரு பார்வை பார்த்தார்கள். அதிலுள்ள தளையசிங்கத்தின் முன்னுரையைப் படித்ததுமே இதை ‘உலக இதய ஒலி’ பத்திரிகையில் வெளியிடலாமா என்று கேட்டார்கள். ‘ஓ, பேஷாய்’ என்று சொன்னேன். அப்படியானால் தளையசிங்கம் பற்றி நீங்கள் ஒரு சிறிய குறிப்பு எழுதிக்கொடுத்து எங்களுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். எழுதி அனுப்பினேன். இரண்டுமே ‘இதய ஒலி’யில் வெளிவந்தது. இவைகளைப் படித்த பலர் மு. தளையசிங்கத்தைப் பற்றியும் அவரது புத்தகங்கள் எங்கே கிடைக்கும் என்றும் விசாரித்தார்கள். இப்படிக் கடிதங்கள் எழுதி விசாரித்தவர்களில் கோவை. சி. கோவிந்தனும் ஒருவர். இவரது கடிதத்தில் அவரது வெளிவராத மற்றப் புத்தகங்களையும் அச்சாக்கம் செய்ய விருப்பம் தெரிவித்து எழுதியிருந்தார். கேட்க வேண்டுமா சந்தோஷத்துக்கு. ஆனாலும் சரீ, வெளியிடுங்கள் என்று சொல்லமுடியவில்லை!

புத்தகம் வெளியிடுவது என்கிறது அவ்வளவு லேசு இல்லை. முதலில் அதை சுத்தமாகவும் அழகாகவும் அச்சாக்கத் தெரிந்திருக்க வேண்டும். இதெல்லாத்தையும் விட ‘பையிண்டு’ பண்ணுகிற காரியமிருக்கே அடேயப்பா, அது ரொம்பக் கஷ்டம். அடுத்து, அதை விற்று முதலாக்குகிறதுயிருக்கே. அது ரொம்ப ரொம்ப கஷ்டம். இதுக்கென்றுள்ள கெட்டிக்காரத்தனம் ரொம்பச் சிலருக்குத் தான் தெரியும். வெறும் ஆசைமட்டும் இருந்து என்ன செய்ய?

என்றெல்லாம் கேட்டு எழுதியிருந்தேன். அடுத்த தபாலிலேயே வந்தது பதில். அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிற ‘சமுதாயம் பிர-சுராலயம்’ பற்றியும் இதுவரை அவர்கள் வெளியிட்டுள்ள புத்தகங்களின் பட்டியல் பற்றியும். ரெட்டைச் சந்தோஷமாகி விட்டது எனக்கு.

இதோ புத்தகமாகவும் வந்துவிட்டது. கோவிந்தனைப் பாராட்ட வேண்டும். இதுவரை நீங்கள் வாசித்தது இந்த முகவுரைக்கு எழுதப்பட்ட முன்னுரை. இனி ‘ஒரு தனி வீடு’க்கு வருவோம்.

இந்த நாவலை தளையசிங்கம் 1960ல் தனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடித்து வெளிவந்தவுடன் எழுதி முடித்தார். நாவலில் வரும் கதையின் ஆரம்ப காலகட்டம் 1949 என்று தெரிகிறது. களம் அவர் பிறந்த புங்குடுதீவுதான். புங்குடுதீவைப் பற்றி அவர் இப்படிச் சொல்லுகிறார்:

‘மாங்காய் நுனியைச் சுற்றி மொய்க்கும் எறும்புகளைப் போல இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் முனையைச் சுற

றிக் கிடக்கும் சின்னஞ்சிறு தீவுகளில் ஒன்றான இந்தப் புங்குடுதீ வின் படம் உயிரியல் மாணவனின் குறிப்புப் புத்தகத்திலிருக்கும் அமீபா படத்தை நினைவூட்டும்.'

'பனைகளால் வரும் பண்டங்களோடு அந்தக் கடலில் கிடைக்கும் மீனையும் நண்டையும் சேர்த்துக் கொண்டால் எந்தப் பஞ்சம் வந்தாலும் பயப்படாமல் வாழலாம்' என்றும் சொல்லுகிறார்.

கதை சுவாரஸ்யமான காதல்கதையாகத்தான் தொடங்குகிறது. கதைப் பாத்திரங்கள் வேற்று மண்ணிலிருந்தாலும் நம்மவர்களாக இருப்பதால் அவர்கள்பேரில் நமக்குப் பிரியமாக இருக்கிறது.

அவர்கள் பேசுகிற வட்டாரத்தமிழ் ரஸிக்கும்படியாகவே இருக்கி றது. முதலில் படிக்கிறவர்களுக்கு - இங்கேயுள்ளவர்களுக்குப் புரி யாதது போலத் தெரிந்தாலும், பழகப் பழக இனிக்கும் நெல்லிக் கனிபோல ஆகிவிடும்.

மனுசவாழ்க்கையின் அந்தரங்கங்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகப்போக வாசிக்கிறதுக்குச் சுவையாகத்தான் இருக் கும். சுரங்கத்துக்குள் இறங்கி வெட்டி எடுத்துக்கொண்டு வந்து சுத்தமாக்கி, பொன்னை ஆபரணங்களாக - தினுசுதினுசாக - செய்து தருகிற வித்தையைத்தான் இந்த எழுத்தாளர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தளையசிங்கம் மூன்று விஷயங்களைக் கொண்டவராக இருக்கி றார். இலக்கியம் - ஆன்மீகம் - அரசியல்.

சிறுவயசிலேயே அவர் எல்லாத் தத்துவங்களையும் அறிந்து-ணர்ந்து ஒரு முடிவுக்கு வந்தவர்.

சரி என்று பட்டதைத் தயங்காமல் வாதத்திறமையோடு துணிந்து எழுதியவர்.

சொல்லிக்கொண்டே இருக்காமல் செயலிலும் இறங்கி நடந்து காட்டியவர்.

தளையசிங்கம் இந்த நாவலை எழுதி முடித்து கால் நூற்றாண்டு ஆகப்போகிறது. இது புத்தகமாக வெளியேவர இத்தனை நாட்கள் ஆகியிருக்கிறது. இன்னும் அச்சேறாத அவருடைய நாவல்களான 'கல்கி புராணம்'. 'ஒளியை நோக்கி', 'யாத்திரை' இவை மூன்றும் சீக்கிரமே வெளியாகும் என்று நம்ப இடமிருக்கிறது.

தனக்கு என்று வசிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தனிவீடு இருப்பதுபோல - அப்படி இருந்தால்தான் நிம்மதி. அது பீத்தல்க் குடிசையாக இருந்தாலும். - ஈழத்துக் தமிழனுக்கும் ஒரு தனி வீடு இருக்க வேண்டும் என்று தளையசிங்கம் எப்பவோ தீர்மானித்து விட்டார். அதை இந்த நாவலில் சொல்லவும் சொல்லிவிட்டார். நமக்கும் இப்போ இது சரி என்றுதான் படுகிறது.

ஒரு கூட்டுக் குடும்பத்தில் அண்ணன் தம்பிக்குள் புகைச்சல் என்று வந்துவிட்டால் வேற குடி வைத்துவிடுகிறோம். தம்பி யையோ அண்ணனையோ அவனுடைய குடும்பத்தோடு. ஆட்டுக் கானது தான் குட்டிக்கும் என்று சொல்வது போல் ஒரு குடும்பத் துக்கானதுதான் நாட்டுக்கும்.

இந்த நாவலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி ஒரு குறை கூறல் (விமர்சனம்?) வருகிறது. இந்தக் 'குற்றச்சாட்டை' ஆட்சேபித்துத்தான் நண்பர் மீரா இதை புத்தமாகக் கொண்டு வர முடியாது என்று சொன்னது.

கம்யூனிஸ்டுகளைக் குறை கூறுவது என்பது இது முதல் தடவை அல்ல. அது எத்தனையோ குறை கூறல்களுக்கு மத்தியில் வளர்ந்த கட்சி. குறை உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது அதைப் பாதித்துவிட்டுப் போகட்டும். குறை உண்மை இல்லை என்று இருந்தால் அந்தக் குறையே குறை பட்டுப்போகும்.

'உள்ளூர் சாதிப்பிரச்சினையில் தாழ்த்தப்பட்ட மக்களை உயர் சாதிக்கு எதிராக போராடத் தூண்டும் இவர்கள் - கம்யூனிஸ்டுகள் - தமிழனின் நிலம், மொழி, கலாச்சாரம், செல்வம், கற்பு, உயிர் இவை யாவற்றையும் வந்து பேரினவாதிகள் சூறையாடும் போது மட்டும் பார்த்துக்கொண்டிருப்பது ஏன்?'

இந்தக் கேள்வி அப்படியே நம்முன் நிற்கிறது.

கம்யூனிஸ்டுகளிடமுள்ள சிறந்த அம்சங்களெல்லாம் தளைய சிங்கத்துக்கு உடன்பாடுதான்.

'கம்யூனிசம் காட்டும் சமூக, அரசியல், பொருளாதாரப் பார்வை யின் பக்கபலத்தோடு எமது ஆழமான சமய கலாச்சார உரிமை-களையும் ஏற்றுக்கொண்டு எவன் போராடுகிறானோ அவனே எந்த விடுதலை இயக்கத்துக்கும் தலைமை தாங்கக் கூடியவனாக இருப்பான்' என்கிறார். (பக்கம் 144).

நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களை 1956ல் பதவி ஏற்றதும் பண்டாரநாயகாகவின் அரசுதான் 'சிங்களம் மட்டும்' என்கிற சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் மூலம் கிளர்ந்தெழ வைக்கிறது.

அந்தச் சட்டத்தை எதிர்த்து அமைதியாக நடத்திய சத்யாகிர கத்தை - 'காலிமுக சத்யாக்கிரகம்' - சிங்கள வகுப்புவாதிகள் வந்து இவர்களை அடித்து, உதைத்து, கல்லெறிந்து காடைத் தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டதோடு, தென் இலங்கையில் பல தமிழர்கள் தாக்கப்பட்டு கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப் படுகின்றன.

வேண்டுமென்றே பிரதமர் பண்டாரநாயகா 'தமிழர்கள் அனுபவிக் கட்டும்' என்ற போக்கில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கத் தாமதித்த அந்த 24 மணித்தியாலங்கள்...' என்கிறார்.

இப்படியாக முதல் முதலில் ஒரு இனக்கலவரத்தைச் சிங்களப் பேரின வகுப்புவாதிகள் துவக்குகிறார்கள்.

பிரசித்திபெற்ற வவுனியா மாநாடு 1958ல் கூடுகிறது. தமிழரின் ஒருமித்த குரலாக.

மாநாடு நடந்து முடிந்ததுமே அதன் வெற்றி, சிங்கள வகுப்புவா-திகளின் வயித்தெரிச்சல் கொடூரமாக, அரக்கத்தனமாக ஆரம்பமா கிறது.

அதை இந்த நாவலின் இரண்டாம் பாகம் 6வது அத்தியாயத்தின் ஆரம்ப இரண்டு பக்கங்களில் சுருக்கமாக வர்ணித்திருப்பது இப்போது நடந்த 1983 ஜுலை வன்செயல்களை அப்படியே வர்ணித்திருப்பது போலவே இருக்கிறது.

கதாநாயகன் சிங்கராசன் இப்படி முடிவுடன் பேசுகிறான்:

'நாங்க ஒரு சமஷ்டி கேக்கக்கூடாது. மாஸ்டர் இனி, தனித்தமிழ் நாடு கேட்பது. அதற்காகப் போராடுவதுதான் தமிழன் செய்ய வேண்டிய வேலை. அதில் வரும் கஷ்டங்களைத் தவிர்க்க முடி யாது. அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. சரித்திர நியதி அது. சுதந்திரம் கிடைக்கும்வரை நாம் போராடுவோம். போராடு கிறபோது எங்கள்ள பலர் சாவினம். அதுக்காக நாங்க பயந்திர மாட்டம்.'

இவ்வாறாக ஈழத்துத் தமிழ்மக்கள் தங்களது சுதந்திரப் போராட் டத்தை ஆரம்பிக்க நிர்பந்தப்படுத்தப்பட்டார்கள்.

உலகத்தில் இதுவரை தங்களது சுதந்திரக்காகப் போராடிய மக் கள் முதலில் செந்நீரில் சிதைவுற்றாலும் காலந்தாழ்ந்தேனும் இறு தியில் வெற்றிதான் பெற்றிருக்கிறார்கள்.

யுத்தமானாலும் கலவரமானாலும் பாதிக்கப்படுவது பெண்தான். அவளுடைய கண்ணீருக்குக் கங்குகரையே இல்லை. முன்பு இதே தீவில் சீதா அழுதுகொண்டிருந்தாள். இப்போ சேதா அழுது கொண்டிருக்கிறாள். அவள் இன்னமும் அழுது கொண்டிருக்கி றாள். அவள் அழுகையை எப்போது நிறுத்துவாள்? ஈழமாதாவின் முகத்தில் புன்னகை பொலிவுறும்போது.

●